
# Path to Dharma

தர்ம நெறி Dharma Neri

News Letter 10 செய்தி மடல்



ஷேத்திர(வயல்)விநாயகர் ஆலயம்,
ஸ்ரீ முன்னேஸ்வரம், சிலாபம், இலங்கை.

Kshethra Vinayaka Temple,Sri Munneswaram,Chilaw,Sri Lanka.
hot mail; kshethravinayaka@yahoo.com: munneswaram@yahoo.com

Author : B.S.Sarma, Kshethra Vinayaka Temple,Sri Munneswaram,Chilaw,Sri Lanka.

Sri Sankar Publications
October 2008 ஒக்டோபர்

# Path to Dharma -தர்ம நெறி- News Letter -10 -செய்தி மடல்

## October 2008 ஒக்டோபர்

**Kshethra Vinayaka Temple,Sri Munneswaram,Chilaw,Sri Lanka.**

க்ஷேத்திர(வயல்)விநாயகர் ஆலயம், ஸ்ரீ முன்னேஸ்வரம், சிலாபம், இலங்கை.

hot mail; kshethravinayaka@yahoo.com: munneswaram@yahoo.com

**Author : B.S.Sarma, Kshethra Vinayaka Temple,Sri Munneswaram,Chilaw,Sri Lanka.**

## இடங்கள் தோறும் விநாயக வழிபாடு

**விநாயக வழிபாடு**

"திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானை
காதலால் கூப்புவார் தம் கை"

என்றும் பதினோராவது திருமுறைக்கிணங்க விநாயகரை வழிபடாதவர் எவருமில்லை.

**விநாயக புராணம்**

பார்க்கவ புராணம் விநாயகரின் தத்துவங்களையும், பெருமைகளையும் விபரிப்பதால் இது விநாயக புராணம் என அழைக்கப்படுகின்றது. இது உபாசனாகாண்டம், லீலாகாண்டம் என இரு பெரும் காண்டங்களாக வகுக்கப்பட்டுள்ளது. இப்புராணத்தில் 250 பிரிவுகள் 12,000 சுலோகங்களால் பிருகு முனிவரால் ஆக்கப்பட்டுள்ளது.

**பச்சோந்தி விநாயகர்**

கன்னியா குமரி மாவட்டத்தின் கேரளபுரம் மகாதேவர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள சந்திரகாந்தக் கல்லால் செதுக்கப்பட்டுள்ள விநாயகப் பெருமானுக்கு மண்டபமே இல்லை. வெயில், மழையைப் பொருட்படுத்தாமல் பக்தர்களுக்கு அனுக்கிரகம் அளிக்கிறார். தட்சிணாயன காலத்தில் (ஆடி - மார்கழி) வெள்ளை நிறமாகவும் உத்தராயாண காலத்தில் (தை -ஆனி) கறுப்பு நிறமாகவும் இருப்பதால் பச்சோந்தி விநாயகர் என அழைக்கப்படுகிறார்.

**சோம விநாயகர் (ச ‸ உமா ‸ விநாயகர்)**

வழமையாக சோமாஸ்கந்த (சிவன் ‸ கந்தன் ‸ உமை) மூர்த்தம் பொதுவாக எல்லா சிவன் கோயில்களிலும் காணப்படும். சிவனுக்கும் சக்திக்கும் இடையில் விநாயகர் அமர்ந்திருக்கும் அரிய சோமகணபதி மூர்த்தம் காஞ்சிபுரத்தில் உள்ள தேனம்பாக்கம் சிவாலயத்தில் சிறப்பானதாகப் போற்றி வழிபடப்படுகின்றது. இதைப்போன்றே திருச்செங்காட்டாங்குடியில் சிவனுக்கும் அம்பிகைக்கும் நடுவில் விநாயகர் வீற்றிருக்கும் கோலத்தை விக்னேஸ்வரானுக்கிரக மூர்த்தி என்பர்.

**குறுங்கால் சட்டை விநாயகர்**

சீனாவில் கோட்டன் என்ற ஆலயத்தில் உள்ள விநாயகர் அரைக்கால் டிரவுசர் அணிந்து காணப்படுவதால் குறுங்கால் சட்டை விநாயகர், டவுசர் வ்நாயகர் என அழைக்கப்படுகிறார்.

**மொட்டை விநாயகர்**

ஜாவாத்தீவுகளில் உள்ள விநாயகர் தலை மொட்டையாக காட்சியளிப்பதால் மொட்டை விநாயகர் என அழைக்கப்படுகிறார்.

**சாவி விநாயர்**

எகிப்தில் உள்ள கோயில்களில் திறப்பு (சாவி) ஒன்றை ஏந்திய நிலையில் காட்சி தருவதால் சாவி விநாயகர், கோனேஸ், கேதேஸ், குனிஸ் என்ற பெயர்களால் விநாயகர் அழைக்கப்படுகிறார்.மேல் உலக, மோட்ச வாசலைத் திறந்து நன்மக்களை மோட்சத்துக்கு விநாயகர் அனுப்பிவைப்பதாக ஓர் ஐதீகம்.

**குஞ்சனானரா விநாயகர்**

தாய்லாந்தில் 7ம், 8ம் நூற்றாண்டுகளில் விநாயக வழிபாடு மிகவும் பிரசித்திபெற்றிருந்தது. இங்கு விநாயகர் குஞ்சினானரா, விக்னேஷ்வர், மஹா விக்னேஷ்வரர் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டார்.

**பிரஹ் கெனெஸ் விநாயகர்**

கம்போடியாவில் விநாயகர் வழிபாடு 7ம் நூற்றாண்டுமுதல் 9ம் நூற்றாண்டு வரை செழிப்புற்றிருந்தது. இங்கு ஆனைமுகன் பிரஹ் கெனெஸ் என்ற பெயரால் குறிப்பிடப்பட்டார்.

**விநாயகர்**

வியட்நாம் நாட்டில் கணேச வழிபாடு 7ஆம் நூற்றாண்டு ஆரம்பமாகி 9ஆம் நூற்றாண்டு மிக உன்னத நிலையை அடைந்தது. இவரை விநாயகர் என வழிபட்டனர்.

**கணேஸ்**

சாம்பா நாட்டில் (தென்வியட்நாம்) 7 ஆம் நூற்றாண்டில் பிரபல்யமான நிலையில் இருந்த கணேச வழிபாட்டில் விநாயகர், கணேஸ் என அன்புடன் அழைக்கப்பட்டார். இது பற்றிய ஆதாரங்களைப் பல விநாயக கருங்கற்சிலைகளும் கருங்கல் வெட்டுச் சான்றுகளும் பறைசாற்றுகின்றன.

**காங்கி -தென், குவான்ஷி, தியென் விநாயகர்**

ஜப்பானில் விநாயகரை அர்த்த நாரீஸ்வரக்கோலத்தில் (ஆண் அரை, பெண்அரை வடிவத்தில்) காங்கி - தென், குவான்ஷி - தியென் என வழிபடுகின்றனர். இங்கு 9ஆம் நூற்றாண்டில் விநாயக வழிபாடு இருந்தது கிராமப்பகுதிகளில் தீவான் ஷன்ஷேர், கோன்கிட்டன. என்ற பெயரால் விநாயகரை வழிபட்டனர்.

**கணேஷர்**

கம்போடியாவிலும், வியட்நாமிலும் விநாயக வழிபாடு 7ம் நூற்றாண்டு முதல் பரபலாகக் காணப்பட்டது. கருங்கற்களில் பெரிய விநாயக உருவங்கள் செதுக்கப்பட்டு கணேஷா. என வழிபட்டனர்.

**ஷோடென் விநாயகர்**

ஜப்பான் நாட்டில் கி.பி 806 ஆம் ஆண்டு முதல் விநாயக வணக்கம் இருந்து வருகிறது. விநாயகரை ஷேர்டன், விநாயகர்,ஷேர்டென், டை - ஷோடன், டென்- யுன் என்ற பெயர்களில் வழிபட்டனர். சில இடங்களில் விநாயகரை பினரிய கேட்டன், கன்கிடென் என்ற பெயர்களில் வழிபட்டனர்.

**கௌன் ஷைட்டின் விநாயகர்**

சைனாவில் விநாயக வழிபாடு பௌத்த இலக்கியங்களிலும், பௌத்த தந்திர சமய வழிபாடுகளிலும் 6ஆம் ஆண்டு முதலே முக்கியத்துவம் பெற்று வந்துள்ளது. அங்கு விநாயகர் கௌன் ஷைட்டின், ஹோடைக் எகன்டியின் என்ற பெயர்களால் பூஜிக்கப்படுகிறார்.

**பிரா கணேஸ் விநாயகர்**

இந்தோனிசியாவில் விநாயக வழிபாடு மிக நீண்ட காலமாக நிலவி வருகிறது. இங்கு விநாயகரை, பிரா கணேஸ் என வழிபடுவார்கள்.

**மகா பினாரி பூர்ணா - விநாயகர்**

பண்டைய பர்மா (மயன்மார்) வில் விநாயக வழிபாடு மிக நீண்டகாலமாக நிலவி வருகிறது. அங்கு விநாயகரை மஹா பினரி பூர்ஹா, மஹாபியன்னே என்ற பெயர்களில் வழிபடுவர்.

**விக்னேஷா விநாயகர்**

கம்போடிய நாட்டில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுச் சாசனங்களில் விநாயகரை விக்னேஷா, விக்னேஷ்வரா என்று குறிப்பிட்டுள்ளனர்.

**விநாயகர்**

சுமாத்ரா, ஜாவாத்தீவுகளில் பண்டைய நாட்களில் விநாயக வழிபாடு மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது.
இங்குள்ள விநாயக உருவச் சிலைகள் எட்டாம் நூற்றாண்டு காலகட்டத்தில்
செதுக்கப்பட்ட எல்லோராக்குகைகளில் உள்ள விநாயக உருவங்களை ஒத்திருப்பதாக அறிஞர்கள் கருதுகிறார்கள்.

**நடன விநாயகர்**

மத்திய ஜாவாவில் உள்ள கண்டி சுகூ என்ற இடத்தில் உள்ள மூன்று விநாயகச் சிலைகள் நடனமாடும் கோலத்தில் உள்ளன. பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த இப்படைப்புகள் உலகப் பிரசித்தி பெற்றவையாகும்.

**டில் ஒக்ஸ் பிடாக் விநாயகர்**

தீபேத் நாட்டில் விநாயக வழிபாடு செழிப்புற்றிருந்தது. அங்கு மக்கள் விநாயகரை டில்ஒக்ஸ் பிடாக் என்ற பெயரில் வழிபட்டனர். 11ம் நூற்றாண்டைச் சேர்ந்த பல விநாயக விக்கிரகங்கள் இன்றும் உள்ளன.

**ஜானுஸ் விநாயகர்**

கிரீக் தேசத்தில் விநாயகரை ஜானுஸ் என்ற பெயரில் வழிபட்டதை வரலாற்று நூல்கள் காட்டுகின்றன. அங்கு ஒருமுக விநாயகரைப் போன்றே இரு முக விநாயகர் சிலைகளும், வழிபாடுகளும் பிரசித்தம் பெற்றிருந்தன.

**லோனோ விநாயகர்**

பொலினீஷியாவைச் சேர்ந்த மக்கள் விநாயகரை லோனோ என்ற பெயரில் வழிபட்டு வந்தனர்.

**பொட்கார் - ஓர் - காகன் விநாயகர்**

மங்கேலியாவில் விநாயகரை பொட்கார் - ஓர் -காகன் என்ற பெயரில் வழிபட்டு வந்தனர். இங்கு விநாயகர் வழிபாடு 12ம் நூற்றாண்டு முதல் பரவலாகக் காணப்படுகிறது.

**மைல்கல் -விநாயகர்**

கிரேக்க நாட்டில் சாலை ஓரங்களில் தூரத்தைக் குறிப்பிடும் மைல் கற்களின் ஒரு புறம் விநாயகர் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். விநாயகர் பயணத்தின்பொது வழிகாட்டியாக இருப்பதை இது குறிக்கும் என்பர்.

**இலங்கையின் மிகப் பழைய விநாயகர்**

இலங்கையின் விநாயகரின் மிகப் பழைய சிலை மிஹிந்தலையில் உள்ள கண்டக் சைத்தியத்தில் உள்ளது. இது கிறிஸ்துவுக்கு முன் முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என அறிஞர்கள் கூறுகின்றனர்.

**ஆப்கானிஸ்தான் - விநாயகர்**

ஆப்கானிஸ்தானில் காபூலில் உள்ள "தர்க்காபீரச்சந்நாத்" என்ற ஆலயத்தில், கார்டெஸ் என்றும் இடத்தில் கண்டெடுக்கப்பட்ட மிகப் பெரிய விநாயகர் சிலை வைத்து பூஜை புனஸ்காரங்கள் செய்து வருகிறார்கள் இவ்விநாயகர் நின்ற கோலத்தில் நான்கு கரங்களுடனும், கழுத்தில் ருத்ராட்ச மாலை அணிந்தும், நாகத்தை பூணூலாக அணிந்தும், இடது பக்கத் தந்தம் உடைந்தும் காணப்படுகிறது.

**புராணம் காட்டும் விநாயக வழிபாடு**

பாகவத புராணம், பிரம்மானந்த புராணம். மத்சய புராணம் ஆகியவற்றில் கணபதி வழிபாடு பற்றிய விபரங்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

**துர்வா விநாயக வழிபாடு**

கார்த்திகை மாதத்து சதுர்த்தசியில் விநாயகரை அறுகம்புல் பீடத்தின் மேல் வைத்து நடத்தும் வழிபாட்டை துர்வ விநாயக வழிபாடு என்பர்.

**விநாயகரின் ஐம்பூத விளக்கம்**

விநாயகரின் பாதங்கள் பூமியையும், வயிறு நீரையும், மார்பு நெருப்பையும் புருவங்கள் காற்றையும் புருவமத்தி ஆகாயத்தையும் குறிக்கும். இங்கு ஐம்பூதங்களாகக் குறிப்பிடப்படும் பூமி பொறுமையையும், நீர் தூய்மையையும், நெருப்பு எதனையும் சேர்த்து வைத்திருக்காத இயல்பையும், காற்று பரந்த மனப்பான்மையையும், ஆகாயம் தைரியத்தையும் குறிக்கும் என்பர்.

**வித்தக விநாயக விரைகழல் சரணே**

விநாயகர் அகவலில் ஔவையார், சைவ மந்திரங்களுள் முக்கியமானதான நமசிவாய என்ற
பஞ்சாட்சரமந்திரத்தின் பொருளினை உணர்த்தி தன்னை ஆண்கொண்டருளியது

விநாயகப் பெருமானின் கமலப் பாதங்கள் என்றார். எனவே, அஞ்சக்கரத்தின் (ஐந்து அட்சரங்களாகிய நமசிவாய) அரும்பொருள் தன்னை என் மனம் உணரும்படி செய்த விநாயகனே உன் திருவடி சரணம் என்று ஔவையார் அருளியுள்ளார்.

**தொட்ட கணபதி**

பசவனக்குடி (பெங்க;ர்) யில் உள்ள தொட்ட பசலண்ணி கோயிலில் பத்தடி உயரமும் 15 அடி அகலமும் கொண்டு விளங்கும் விநாயகரின் முகம், காது ஆகியவை நந்திக்குரியது போன்று அமைந்துள்ளது. பசாவா என்ற கன்னடச் சொல்லுக்கு நந்தி என்ற பொருள்.

**நாவற்கனி விநாயகர்**

சூலூர் பேட்டை (ஆந்திரா) யிலுள்ள செக்காளயம்மன் திருக்கோயிலில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் விநாயகரின் வலது திருக்கரத்தில் நாவற்பழங்கள் உள்ளதால் நாவற்கனி விநாயகர் என அழைக்கப்படுகிறார். இக்கோயிலுக்குக் கதவுகள் இல்லாததால் எப்பொழுதும் திறந்தே இருக்கும்.

**பத்ம விநாயகர்**

திருப்பரங்குன்றத்து ஆலயத்தில் தாமரை மலர்மீது அமர்ந்த கோலத்தில் அருள் புரியும் பத்ம விநாயகரைக் காணலாம்.

**உன்னியப்ப நிவேதன விநாயகர்**

கொட்டாரக்காரை (கேரளா) யிலுள்ள மணிகண்டேஸ்வரம் சிவன் கோயிலில் உள்ள விநாயகப் பெருமான் முன்னிலையிலேயே உன்னியப்பம் என்ற விசேட பிரசாதம் தயாரிக்கப்பட்டவுடனேயே சுடச்சுட நிவேதனம் செய்யப்படுவது ஒரு மிக அரிய நிகழ்ச்சியாகும்.

**ஒன்பது தல விருட்ச விநாயகர்**

மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் வன்னி மரத்தடியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் விநாயகரைச் சுற்றி வன்னி, வேம்பு, மந்தாரை, அத்தி, நெல்லி, அரசு, வில்வம், பவள மல்லிகை, நாவல் ஆகிய ஒன்பது தல விருட்சங்களும் காணப்படுகின்றன.

**துவம்ச கோல விநாயகர்**

திருப்பரங்குன்றத்தில் உள்ள பழைய சொக்கநாதர் கோயில் முன் மண்டபத்தில் வீற்றிருக்கும் விநாயகப் பெருமான் சிலை, பூத கணத்தின் மீது ஏறி போர்செய்ய ஆயத்தமான நிலையில் உள்ள துவம்ச கோலத்தில் காணப்படுகிறது.

**அமர்ந்த ஆவுடை விநாயகர்**

சிவலிங்கத்தின் ஆவுடையார் பகுதியை ஒத்த அமைப்பிலான ஆவுடையில் அமர்ந்த நிலையில் காட்சி தரும் விநாயகர் திருவையாற்றில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ளார்.

**கோல்ஹாபூர் விநாயகர்**

கோல்ஹாபூர் (மஹாராஷ்டிரம்) ஆலயத்தில் உள்ள விநாயகர் சிலை ஐந்து தலை நாகக் குடையில் கீழ் பாம்பணையில் அமர்ந்த நிலையில் காணப்படுவதோடு உலகிலேயே மிக உயரமான விநாயகர் சிலையாகக் கருதப்படுகிறது. விநாயகர் சிலையின் உயரம் தொண்ணூறு அடியாகவும், நிறை எண்ணூறு மெட்ரிக் தொன்னாகவும், உள்ளது. புராண நூல்களில் கூறப்பட்ட சிலை அமைப்பு விதிமுறைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டதாக இவ்விநாயகர் உருவம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**பதினொரு அற்புத சுயம்பு விநாயகர்**

சேண்பாக்கம் (வேலூர்) என்ற தலத்தில் ஓம் என்ற பிரணவ மந்திர வடிவத்தில் பதினொரு விநாயகர் சிலைகள் சுயம்புவாக (தாமாகவே தோன்றியமை) முழு உருவில் அமையாத நிலைகளில் உள்ளன. இவ்விநாயகரின் பெயர்கள் பாலகணபதி, நடன கணபதி, கற்பக கணபதி, ஓங்கார கணபதி, சிந்தாமணி கணபதி, செல்வ கணபதி, மயூர கணபதி, மூஷிக கணபதி, வல்லப கணபதி, சித்தி புத்தி கணபதி, ஐம்முக கணபதி, என ஓவியங்கள் குறிப்பிடுகின்றன.

**லிங்க வடிவ விநாயகர்**

தீவனூர் கிராமத்தில் வயல்நடுவே உள்ள குளக்கரையில் சிவலிங்க சொரூபமாக விநாயகர் காட்சி தருகிறார். லிங்கத்தினுள் குழந்தை வடிவத்தில், யானை முகத்துடனும், இருகரங்களுடனும் கால்களை நீட்டிய கோலத்தில் விநாயகர் உள்ளார்.

**நோய் தீர்க்கும் விநாயகர்**

சூரியனார் கோயிலில் (கும்பகோணம்) எழுந்தருளியுள்ள நோய் தீர்த்த விநாயகர், பல்வேறு நோய்களைக் களைந்து அருள்பாலிக்கிறார். நான்முகனின் சாபம் பெற்ற நவக்கிரகங்கள் இங்குவந்து வழிபட்டதாக ஐதீகம்.

**பிள்ளையார் பட்டி கோயில் பிடி கொழுக்கட்டைப் பிரசாதம்**

தமிழ் நாட்டின் காலத்தால் முந்திய விநாயகர் வீற்றிருந்து அருள்பாலிக்கும் பதி, பிள்ளையார் பட்டிக் கோயிலாகும். இருகரங்களை மட்டுமே கொண்டுள்ள இவ்விநாயகப் பெருமானுக்கு தினமும் விசேட பிரசாதமாக பிடிகொழுக்கட்டை நிவேதிக்கப்படுகிறது.

**முக்குறுணி விநாயகர்**

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் வீற்றிருந்து அருள் பாலிப்பவர் ஏழு அடி உயரமான விநாயகப் பெருமான். அங்குள்ள மூன்று சந்திகள் உள்ள வண்டியூர் தெப்பக்குளத்தை தோண்டும் போது கிடைக்கப்பெற்றதே இவ்விநாயகர் சிலையாகும். மூன்று தெருக்கள் சந்திக்கும் இடத்தை முக்குணி என்பர். இதுவே மருவி முக்குறுனி என்றாகியது. இங்கு மூன்று குறுணி அரிசி மாவில் கொழுக்கட்டை செய்து நிவேதனம் செய்வர்.

**நான்மறை செவிமடுக்கும் விநாயகர்**

திருவேதிக்குடி (திருவையாறு) த் திருப்பதியில் உள்ள ஸ்ரீ வேத புரீஸ்வரர் ஆலயத்தின் அர்த்த மண்டபத்தில் வீற்றிருக்கும் விநாயகர், அங்கு இறைவன் நான்மறை ஓதுவதாகக் கூறப்படும் வேதத்தைச் செவிமடுப்பதற்காக, வலப்புறமாகச் சாய்ந்து காதை நிமிர்த்தி, இறைவன் ஓதும் வேதத்தைக்கேட்கும் பாவனையில் அமைந்துள்ளது.

**பேயை விரட்ட காலைத்தூக்கிய விநாயகர்**

திருமறைக்காட்டு (வேதாரண்ணியம்) டில் உள்ள மேற்குக் கோபுர வாசலில் விநாயகர் ஒற்றைக் காலைத்தூக்கிய கோலத்தில் காட்சியளிக்கிறார். இராவண சங்காரத்தின் பின் இராமபிரான் சேதுவில் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்து பிரம்மஹத்திதோஷத்தை நீக்கியதாகவும் பிரம்மஹத்தி பேய் உருவில் வெளிவந்தபோது அதனை காலைத்தூக்கி விரட்டியதாகவும் கூறப்படும் இதிகாச புராணவரலாற்றை இக்கோலம் குறிப்பிடுகிறது.

**வாய்திறந்து வரவேற்ற விநாயகர்**

திருவையாற்றில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள எம்பெருமானைத்தரிசித்து அருள்பெற சுந்தரமூர்த்தி-நாயனார் சென்ற பொழுது காவேரி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. கரையிலிருந்த ஓடக்காரர் இவரை மேற்கொண்டு பயணத்தைத் தொடர அனுமதி மறுத்தனர். உடனே அக்கரையிலிருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் "ஐயாற்றுடை அப்பனே" என உரத்த தொனியில் விளித்தார். உடனே "ஓலம் ஆற்றில் இறங்கி வா" எனப்பதில் வந்தது. உடனே சுந்தரர் ஆற்றில் இறங்கியதும், நீர் வழிவிட, சுந்தரர் ஆலயம் சென்று வழிபட்டார். ஓலமிட்ட விநாயகர் இன்றும் இங்கு அமர்ந்து அருட்கடாட்சம் அருள்கிறார்.

**ஆதி விநாயகர்**

செதலபதி ஆலயத்தின் கோயில் வாசலில் அமைந்துள்ள ஆதி விநாயகருக்கு யானை முகத்துக்கு முந்தைய விநாயகர் என்பதால் மனித உருவத்திலேயே காட்சித் தருகிறார். இவரை ஆதிவிநாயகர் என்று பெருமையோடு பக்தர் வழிபடுவர்.

**கதிகலங்காமல் காத்தருளிய விநாயகர்**

ஆலங்குடியில் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் இறைவன் ஆபத்சகாயர். கஜாமுகாசுரனை வதம் செய்து அழித்தவர். விநாயகப்பெருமான், கஜாமுக சம்ஹாரம் செய்து மக்களைக் காப்பாற்றியதால் இவ்விநாயகரை கலங்காமல் காத்த விநாயகர் என்பது.

**பொது நிவேதன விநாயகர்**

கணபதி அக்ரகாரம் (தஞ்சாவூர்) என்ற தலத்தில் உள்ள மகா கணபதிக்கு சதுர்த்தி விழாவன்று
கோயிலிலும், வீடுகளிலும் சதுர்த்தி பூஜை நடைபெற்றாலும், எல்லாவீடுகளிலும்

தயாரிக்கப்படும் கொழுக்கட்டை அப்பம், கடலை, மோதகம் போன்றவற்றை கோயிலுக்குக் கொண்டு வந்து விநாயகருக்கு நிவேதனம் செய்வது வழக்கம்.

**குட்டுப்பட்டு தலையில் குழி தோன்றிய விநாயகர்**

கோகர்ணா (கர்னாடகம்) ஆலயத்தில் உள்ள விநாயகரின் தலையில் ஒரு பள்ளம் இருப்பதைக் காணலாம். கயிலையில் சிவனிடம் இருந்து ராவனன் பெற்று வந்த ஆத்மலிங்கத்தை விநாயகர் இங்கே தரையில் வைத்தார். எனவும், பின் எவ்வளவு முயன்றும் ராவனணால் அதனைத் தூக்க முடியாததால் இராவணன் தனது ஆத்திரத்தை வெளிப்படுத்த, சிறுவனாக வந்து உதவிய விநாயகரின் தலையில் ஓங்கிக் குட்டினான் எனவும் புராணங்கள் கூறுகின்றன. அதுவே இன்றும் இந்த விநாயகர் தலையில் குழிபோன்ற பள்ளமாகக் காணப்படுகிறது.

**நெல்லிக்காய் விநாயகர்**

திருவாரூரில் உள்ள தியாகராஜர் கோயிலில் நவக்கிரக சந்நிதியில் உள்ள விநாயகர் நெல்லிக்காய்-களாலான மாலையை அணிந்த கோலத்தில் காணப்படுகிறார்.

**காணபத்ய அதர்வ சீர்ஷம் காட்டும் விநாயக கோலம்**

விநாயகரின் உருவ அமைப்பைப் பற்றிய மிக விரிவான வர்ணனையை கணபத்ய அதர்வ சீர்ஷம் என்ற புனித நூல் கொண்டுள்ளது.

**பக்தர்களே பூஜை செய்யும் விநாயகர்**

குரவலப்புரம் (வேதாரண்யம்) என்னும் தலத்தில் அருட்கோலக் காட்சியாகவுள்ள லிங்கவடிவ ஆலயத்தில் வீற்றிருக்கும் விநாயகரை பக்தர்கள் தாங்களாகவே பூஜை செய்யலாம்.

**பதினெட்டுக்கர விநாயகர்**

ராமேஸ்வரர் கோயிலின் துவஜஸ்தம்ப மண்டபத்தில் உள்ள விநாயகர் பதினெட்டுக் கரங்களுடன் அருள் புரிகிறார்.

**கௌபீனதாரிக் கோல விநாயகர்**

திருகம்பகத் திருத்தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளும் விநாயகப் பெருமான் கௌபீனதாரிக் கோலத்தில் காட்சிதருகிறார். பிரபலமான மிருத்தியுஞ்ச ஸ்தோத்திரம் இவ்விநாயகரைப் புகழ்வதாக உள்ளது.

**நாக விநாயகர்**

பாபநாசம் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள விநாயகரின் உடல்முழுவதும் சர்ப்பங்களால் அலங்கரிக்கப்-பட்டுள்ளது. ராகு, கேது, தோஷநிவிர்த்திக்காக இவ்விநாயகரை பக்தர்கள் வழிபடுவார்கள்.

**கடலைக்கல்லு, கசிவுக்கல்லு விநாயகர்**

ஹம்பியில் உள்ள பத்தடி உயரமான விநாயகரைக் கசிவுகல்லு விநாயகர் (கடுகு போன்றவர்) எனவும் இருபது அடி விநாயகரை கடலைக்கல்லூர் விநாயகர்(கடலை வித்து போன்றவர்) எனவும் வழிபடுவர்.

**வெள்ளெருக்கு விநாயகர்**

ஓரகடம் (சென்னை) தலத்தில் எழுந்தருளியுள்ள விநாயகர் திருவுருவம் வெள்ளெருக்கம் வேரில் செதுக்கப்பட்டதாகும்.

**வயிறு வெடித்த விநாயகர்**

காக்கைய நல்லூர் (அம்பாசமுத்திரம்) ஆலயத்தில் அருள்பாளிக்கும் விநாயகரின் திருவுருவம் தொந்தி வயிறு வெடித்த கோலத்தில் காணப்படுகிறது.

**துணையிருந்த விநாயகர்**

திருப்பளையூர் (திருவாருர் அருகில்) உள்ள விநாயகர் துணை இருந்த விநாயகர் என அழைப்பர். காதொல் சோழனை அவனுடைய சிறு வயதில் கொல்வதற்கு பகைவர் சூழ்ச்சி செய்தனர். விநாயகர் சிவனுக்கு துணையாக இருந்து காப்பாற்றினார் என்பது ஐதீகம்.

**பஞ்ச பூதங்களும் - விநாயகரும்**

விநாயகரின் பாதங்கள் பூமியையும், வயிறு நீரையும், மார்பு நெருப்பையும் இரு புருவங்கள் காற்றையும், புருவமத்தி ஆகாயத்தையும் குறிக்கும் என புராண நூல்கள் கூறும்.

**கோலூன்றிய கோல விநாயகர்**

காரைமடை நஞ்சுண்டேஸ்வரர் (கோயமுத்தூர்) ஆலயத்தில் அருள்பாலிக்கும் விநாயகர் ஒரு காலைத் தொங்க விட்டும் மற்றக்காலை மடக்கிக் கொண்டும் கையாலும், துதிக்கையாலும் கம்பை ஊன்றிய கோலத்தில் காட்சி தருகிறார்.

**உளிபடாத விநாயகர்**

திருக்கருக்காப்பூரில் (தஞ்சாவூர்) கற்பக ரட்சாகாம்பிகை ஆலயத்தில் எழுந்தருளியுள்ள இரட்டை விநாயகரில் ஒரு விநாயகரை உளிபடாத விநாயகர் எனப் போற்றி வழிபடுவார்கள்.

**நாகாபரண விநாயகர்**

நாகப்பட்டினத்திலுள்ள நீலாயதாட்சி ஆலயத்தில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள விநாயகருக்கு ஐந்து தலை நாகம் குடைபிடிப்பதால் இவரை நாகாபரண விநாயகர் என்பர்.

**மாங்கனி விநாயகர்**

திருவேங்கை வாசல் (புதுக்கோட்டை) ஆலயத்தில் அருள்பாலிக்கும் விநாயகப் பெருமான் ஒரு கையில் மாம்பழத்தை ஏந்தியவாறு காட்சிகொடுப்பதால் மாங்கனி விநாயகர் என அழைக்கப்படுகிறார்.

**இடுக்கு விநாயகர்**

கிரிவலப்பாதை (திருவண்ணாமலை) யில் வீற்றிருந்து கருணாகடாட்சம் செய்தும் விநாயகரைத் தரிசிக்க மிகக்குறுகலான இடுக்கு வழியாகத் தவழ்ந்து சென்றே தரிசனம் செய்ய முடியும்.

**கைகாட்டி விநாயகர்**

திருநாட்டியத்தான்குடி (திருவாரூர்)த்தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள விநாயகரை கைகாட்டி விநாயகர் என்று பெருமையோடு வழிபடுவர்.

**பரிதாபம் தீர்த்த விநாயகர்**

திருப்பத்தூரில் அருட்கடாட்சம் புரியும் விநாயகரை பரிதாபம் தீர்த்த விநாயகர் என்ற பெயரில் வழிபடுவர்.

**வெயில் காத்த விநாயகர்**

திருப்பெருந்துறையின் சத்திரத்துக்கு அண்மையில் உள்ள விநாயகர் கோயிலுக்கு மேற்கூரை இல்லை. அப்பகுதியால் நடந்து செல்லும் வழிப்போக்கர்கள் வெயிலினால் துன்புறாத வண்ணம் விநாயகரே முழு வெயிலையும் உவந்து ஏற்று அப்பகுதியை என்றும் மந்தாரமான காலநிலையில் வைத்துள்ளார்.

**போருக்குப் புறப்படும் விநாயகி**

வாசுதேவ நல்லூர் தலத்திலுள்ள தேரில் போர்க்கோல பாவனையிலான விநாயகி (பெண் உருவம்) காணப்படுகிறது. யானைமுகத்தோனின் இடுப்புக்குக் கீழான பகுதி யாளி உருவத்தைக் கொண்டது. இருகைகளில் பாசம், அங்குத்துடனும் மற்றைய இரு கைகள் ஒன்றில் வாளும், அடுத்ததில் கோடரியும் ஏந்திய நிலையில் காணப்படுகிறது.

**வீணை இசைக்கும் விநாயகர்**

பவானி( திருநணா) என்ற இடத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஆதிகேசவப் பெருமான் ஆலயத்தில் உள்ள மண்பத்தில் விநாயகர் தாமரை மலர்களின் மீது நடக்கும் கோலத்தில் அங்குசத்துக்குப் பதிலாக வீணையை மீட்கும் கோலத்தில் உள்ளார்.

**குழந்தைக் கோலத்தில் விநாயகர்**

வேலூரில் அமைந்துள்ள ஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலில் விநாயகர் குழந்தைக்கோலத்தில் தும்பிக்கையில் கொழுக்கட்டையை ஏந்திய நிலையில் பின்புறம் திரும்பிப்பார்க்கும் பாவனையில் அருள்புரிகிறார்.

**கஜ-நர-புலி விநாயகர்**
மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் உள்ள துவஜஸ்தம்ப மண்டப தூண் ஒன்றில் யானைமுகத்தான், கழுத்திலிருந்து இடுப்புவரை பெண் உருவாகவும், இடுப்புக்குக் கீழான பகுதி புலியின் தோற்றத்தையும் கொண்டு விளங்குகிறார். இதே வகையான உருவத்தை சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் 11ஆம் நூற்றாண்டில் சிற்பிகள் உருவாக்கினர்.

**பக்தர்களால் குட்டப்படும் விநாயகர்**
திருவாரூரில் நரிமணம் என்ற தலத்தில் உள்ள விநாயகரை பக்தர்கள் தங்கள் தலையில் குட்டி, தோப்புக்கரணம் போட்டுவிட்டு விநாயகர் தலையிலும் பக்தர்கள் தங்கள் கைகளால் மூன்று முறைகள் குட்டியபின் வழிபாடு செய்கிறார்கள். இவ்விநாயகர் குட்டப்படும் விநாயகர் எனப் போற்றப்படுகிறார்.

**வில்லேந்திய விநாயகர்**
ஜெயங்கொண்டானில் உள்ள வைரவனீஸ்வரர் கோயிலில் உள்ள விநாயகர் தன்னுடைய இரு கைகளாலும் ஒரு பெரிய வில்லை ஏந்தியவாறு பக்தர்களுக்குக் காட்சி தருகிறார்.

**அபிஷேக தீர்த்தத்தை உள்ளிழுக்கும் நாலாயிரத்தொரு விநாயகர்**
சீர்காழியில் உள்ள திருமாணிக்க கூடம் என்ற வைஷ்ணவத் திருத்தலத்தில் உள்ள விநாயகருக்கு அபிஷேகம் செய்யும் பால், தயிர், புனித நீர் மற்றைய அபிஷேகத்திரவியங்கள் அனைத்தும் விநாயகரின் சிகை வழியே உள்ளே சென்று விடும்.

**கணேச புராணம் காட்டும் விநாயக சொரூபம்**
மணரம்ப கணபதியும், மாதங்ககணபதியும் ஐந்து முகங்களுடன் இருப்பதாகவும் விநாயகரின் கைவிரலுக்கு மரகதமணி பதிக்கப்பட்ட மோதிரம் உள்ளதாகவும் கணேச புராணம் காட்டும்.

**விபூதி விநாயகர்**
மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் உள்ள தெப்பக்குளத்தின் வடக்குத்திசையில் உள்ள விநாயகருக்கு எப்பொழுதும் உடல் முழுவதும் விபூதியை அபிஷேகம் செய்வதால் விபூதி விநாயகர் எனப்படுவார்.

**பின்புறத்தரிசன விநாயகர்**
லென் யாட்ரி (புனே) யில் உள்ள மலை உச்சியில் 6280 படிகளுக்குமேல் குடவரைக் கோயிலில் இருந்து அருள்பாலிக்கும் கிரிஜர்ட்மாஜ் என்று அழைக்கப்படும் விநாயகரின் பின்புறத் தரிசனத்தை மட்டுமே காணமுடியும்.

**இருபதுகர, பத்துத் துதிக்கையுடைய விநாயகர்**
ரஞ்சின்கரின் (புனே) விநாயகர் ஆலயம் ஒன்பதாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இங்கு வீற்றிருந்து அருள்பாலிக்கும் விநாயகர் இருபது கரங்களையும், பத்துத் துதிக்கைகளையும் கொண்ட கோலத்தில் காட்சியளிக்கிறார்.

**பத்துத்தலை விநாயகர்**
சென்னை ஒக்ஸ்போர்ட்பள்ளியில் சித்தி சகித விநாயகர் பத்துதலைகளையும் வலஞ்சுழி துதிக்கையையும் கொண்ட கோலத்தில் காட்சி தருகிறார்.

**மொட்டைத்தலை விநாயகர்**
அழகியபாண்டியபுர (திருநெல்வேலி)த் திருத்தலத்தில் உள்ள விநாயகர் மொட்டைத் தலைக்கோலத்தில் அருள் பாலிக்கிறார்.

**நடன விநாயகர்**
துவார சமுத்திரம் (கர்நாடகம்) என்ற பதியில் உள் ஹொய்சளேசுரர் திருத்தலத்தில் உள்ள விநாயகர் நடனக் கோலத்தில் அருளாட்சி புரிகிறார்.

**நேரான பார்வை கொண்ட விநாயகர்**
குணசீலம் (திருச்சி) என்ற ஊரில் உள்ள தார்மீக நாதர் ஆலயத்தில் விநாயகருக்கு யானைக்கு உள்ளது போன்று பக்கவாட்டில் கண்கள் அமையாமல் நேரான பார்வை கொண்டதாக அமைந்துள்ளன. இது பக்தர்களின் குறைகளை நேருக்கு நேராகப் பார்வையிட்டுத் தீர்த்து வைக்கிறார் என அன்பாகக் கூறுவர்.

**புல்லாங்குழல் ஊதும் விநாயகர்**
ஸ்ரீ சைலம் (ஆந்திரா) என்ற தலத்தில் உள்ள விநாயகர் புல்லாங்குழல் ஊதும் கோலத்தில் காட்சி தருகிறார்.

**பூவிழுங்கி விநாயகர்**
திருச்சிற்றம்பலம் (பட்டுக்கோட்டை) கிராமத்தில் உள்ள பக்தர்கள் ஒரு சிறுபூவை விநாயகரின் தும்பிக்கையில் வைத்துவிட்டு கண்மூடி வேண்டுதல் செய்வர். அந்தப்பூ தும்பிக்கையினுள் சென்றுவிட்டால் எண்ணிய காரியம் கைகூடும் எனவும் பூ வைத்தவாறே இருந்தால் காரியம் கைகூடாது என்றும் நம்பிக்கை உள்ளது. இதனால் சித்தி விநாயகரை பூ விழுங்கி விநாயகர் என்பர்.

**நீர்வீழ்ச்சி அபிஷேக விநாயகர்**

செர்செப்பா (கர்நாடகம்) நீர் வீழ்ச்சியின் அடிப்பாகத்தில் உள்ள கோயிலின் மேற்பகுதி உடைந்துள்ளதால், அருவி நீர் எப்பொழுதும் விநாயகரின் மீது சொரிவதால் அபிஷேகக் கோலத்தில் காணப்படுகிறார்.

**மழை வேண்டி குளத்தில் தங்கும் விநாயகர்**

பத்தராலிப் பேட்டை (திருக்கண்ணமங்கை, திருவாரூர்) பெருமான் கோயிலின் முன் தரிசன புஷ்கரணியில் விநாயகர் அமர்ந்து அருள்பாலிக்கிறார். உரிய காலத்தில் மழை பெய்யாவிட்டால் இவ்விநாயகப் பெருமானை குளத்தில் இறக்கி வைத்து, மழை பொழிந்து முடிந்த பின்னரேயே பழைய இருப்பிடத்தில் (யாதாஸ்தானம்) வைப்பார்கள்.

**தண்ணீரில் இருக்கும் விநாயகர்**

வரசித்தி விநாயகர் (சித்தூர் - ஆந்திரா) இரண்டு அடிகள் ஆழமுள்ள தண்ணீரினுள் அமர்ந்த படி அருளாட்சி செய்கிறார்.

**நீர் சுரக்கும் விநாயகர்**

திருக்காளத்தி சிவன் கோயில் பிராகாரத்தில் இருந்து அருள்புரியும் விநாயகர் மிகக் குறுகலான பாதையில் முப்பது அடி ஆழத்தில் வீற்றிருக்கிறார். இவ்விநாயகர் சிலையில் எப்பொழுதும் நீர் சுரந்து கொண்டேயிருக்கும்.

**நவ பாஷாண விநாயகர்**

இரிஞ்ஞால குடா (கேரளா) என்ற தலத்தில் உள்ள விநாயகர் சிலையை சித்தர்கள் நவபாஷாணத்தால் உருவாக்கி வைத்துள்ளனர். நவபாஷாண சிலை செய்வது மிகவும் சிரமமான பணியாகும். மருத்துவத்தில் ஆழ்ந்த அறிவும், செய்முறையில் நுண்ணிய திறனும், கருவறையிலே தோன்றிய இறையருளும் உள்ள சித்தர்கள் மட்டுமே நவபாஷான சிலை ஆக்க முடியும். நவபாஷாணத்தில் செய்யப்பட்ட சிலை வளைந்து கொடுக்கவோ, உடையவோ மாட்டாது. நெருப்பில் எரித்தாலும் எரியாது. ரம்பத்தால் அறுத்தாலும் அறுபடாது. எதனாலும், சிலையின் மீது ஒரு சிறு கீறலைக் கூட ஏற்படுத்த முடியாது.

**சந்தனக்கட்டை விநாயகர்**

பேலூர் (கர்நாடகம்) திருப்பதியில் உள்ள நடன விநாயகரின் திருவுருவமும் பீடமும் நன்கு முற்றிய வைரமான சந்தனக் கட்டையால் உருவாக்கப்பட்டதாகும்.

**சண்முக விநாயகர்**

திருக்கழுக்குன்றத்தின் அடிவாரத்தில் உள்ள சங்க தீர்த்தத்தின் வடமேற்குத் திசையில் உள்ள இரு விநாயக வடிவங்களில் ஒன்று ஆறு ஆனைத்திருமுகங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.

**மிளகு விநாயகர்**

சேரன்மாதேவி (திருநெல்வேலி) இங்குள்ள கால்வாயில் நீர்மட்டம் குறைந்து வறட்சி ஏற்படும் வேளைகளில் மிளகை அந்த ஆற்றின் சேற்றுநீரில் நனைத்து அம்மியில் வைத்து அரைத்து அந்த விழுதை இவ்வூர் விநாயகருக்குக் சாத்துவதால் (மிளகுக்காப்பு) உடனே மழை பெய்யுமாம்.

**வெண்மை விநாயகர்**

திருவலஞ்சுழி (கும்பகோணம்) யில் உள்ள சுவேத விநாயகருக்கு ஒருபொழுதும் அபிஷேகம் செய்வதில்லை. பச்சைக் கற்பூரத்தை மட்டுமே சாத்துவர். வலஞ்சுழி கோலத்தில் உள்ள இந்த விநாயகர் வெண்மையாகக் காட்சியளிக்கிறார்.

**தேன் உறிஞ்சும் விநாயகர்**

திருப்புறம்பயத்தில் (கும்பகோணம்) எழுந்தருளியுள்ள விநாயகருக்கு விநாயக சதுர்த்தி தினத்தன்று நடைபெறும் அபிஷேகத்தின் போது ஊற்றப்படும் தேன்முழுவதும் விநாயக விக்கிரகத்தால் உறிஞ்சப்பட்டுவிடும்.

**கனேஷ் மகராஜ் - விநாயகர்**

மோ தீ துங்கிரி (ஜெய்ப்பூர்) என்ற தலத்தில் உள்ள விநாயகர் இடது பின்காலை மடித்து, வலது காலைக் குந்தி அமர்ந்த கோலத்தில் சித்தி- புத்தி சக்திகள் சகிதம் காட்சி தருகிறார். வெள்ளைக் சலவைக்கல்லால் ஆக்கப்பட்ட இம்மூர்த்தி எப்பொழுதும் சிந்தூரத்தில் குளிப்பாட்டிய நிலையில் காட்சி தருவார். இவ்விநாயகர் கனேஷ் மகராஜ் விநாயகர் என அன்போடு அழைக்கப்படுவார்.

**மாம்பழப்பிரசாத விநாயகர்**

கோட்டாறு (நாகர் கோயில்) என்ற தலத்தில் உள்ள தேசிக விநாயக கோயிலில் சித்திரை முதல் நாள் அன்று கோயிலுக்கு வரும் பக்தர்கள் அனைவருக்கும் மாம்பழத்தைப் பிரசாமமாகக் கொடுப்பது வழக்கம்.

**மூன்று துதிக்கை (திரிசுண்ட்) விநாயகர்**

சோம்வார்பேட்டி (பூனா) என்ற இடத்தில் பேஷ்வர் காலத்தில் கட்டிய கருங்கல்லாலான கோயிலில் அருள் பாலிக்கும் விநாயகர் மூன்று தும்பிக்கைகளுடனும், தலையில் வெள்ளிக்கிரீடம், ஒரு கையில் பரசு மற்றதில் சூலம் மூன்றாவது கை அபய ஹஸ்தமாகவும், நான்காவது கையில் மோதகத்துடனும் அனுக்கிரகம் செய்கிறார்.

**ஆழத்து விநாயகர்**

விருத்தாசலத்தில் அமைந்துள்ள விருத்தகிரீஸ்வரர் ஆலயத்தில் உள்ள விநாயகர் தரை மட்டத்துக்கு சுமார் 27அடி ஆழத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கிறார்.

**புற்று விநாயகர்**

பழங்கமூர் (ஆரணி) குளக்கரைக் கோயிலில் விநாயகர் பெருமான் புற்று வடிவான கோலத்தில் காட்சி தருகிறார்.

**கடுக்காய் விநாயகர்**

திருக்கறை (திருவாரூர்) என்ற தலத்தில் உள்ள விநாயகரைக் கடுக்காய் விநாயகர் என அழைப்பர்.

**பத்ம புராணத்தில் விநாயகர்**

வேத வியாசர் பத்ம புராணத்தில் விநாயகர் அம்சங்களையும், கோலங்களையும் விரிவாக விளக்கியுள்ளார்.

**சிலம்பணி விநாயகர்**

தேவகோட்டையில் உள்ள ஆலயத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் விநாயகரின் கால்களில் சிலம்புகளுடன் இருப்பதால் சிலம்பணி விநாயகர் எனப்போற்றப்படுகிறார்.

**செங்கழுநீர் விநாயகர்**

மயிலாப்பூர் நகர் மத்தியில் கச்சேரி சாலையில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள விநாயகர் சிலை முன்னூறு வருடங்களுக்கு முன் திருவாரூர் அருகே ஒரு செங்கழு நீர் ஓடையில் இருந்து கிடைக்கப்பெற்றது. பின்னர் இவ்விநாயகர் சிலை இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டு செங்கழுநீர் விநாயகர் என்ற பெயரால் வழிபடப்படுகின்றது.

**மரக்குகை விநாயகர்**

மலையப்ப நல்லூர் (கும்பகோணம்) கிராம எல்லையில் உள்ள 2000 வருடங்கள் பழமை வாய்ந்த ஆலமரம் இயற்கையாகவே பிளந்து குகைபோன்ற அமைப்பைக் கொண்டுள்ளது. 8 அடி நீளம் 3 அடி அகலம் கொண்ட இந்த இயற்கை அமைப்பு அங்கு அமர்ந்து அருள்பாலிக்கும் விநாயகரை வெயிலிலிருந்தும், மழையிலிருந்தும் பாதுகாக்கின்றது. இவ்விநாயகர் மரக்குகை விநாயகர் என அழைக்கப்படுகிறார்.

**தமிழகத்தின் காலத்தால் முற்பட்ட விநாயகர்**

திருப்பத்தூர் - காரைக்குடி மார்க்கத்தில் அமைந்துள்ள பிள்ளையார் பட்டி ஆலயத்தில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள குடவரை விநாயகர், சிற்பமே தமிழ்நாட்டில் உள்ள கணபதி வடிவங்களுள் காலத்தால் முற்பட்டது.

**பிரெஞ்ச் விநாயகர், இங்கிலீஷ் விநாயகர்**

தாமாணங்குடி (காரைக்கால்) கிராமத்தில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள விநாயகர் ஆலயத்தில் பிரெஞ்ச் விநாயகர், இங்கிலீஷ் விநாயகர் என்ற பெயரோடு இரு விநாயக உருவங்கள் உள்ளன. மக்கள் அன்போடு பிரெஞ்ச் விநாயகர், இங்கிலீஷ் விநாயகர்என்று அழைத்து பூஜை புனஸ்காரங்கள் செய்கின்றனர்.

**ஓங்கார ஒலி விநாயகர்**

ஓணகாந்தன் தனித் திருக்கோயிலில் (காஞ்சிபுரம்) அருள்பாலிக்கும் விநாயகரில் அருகில் காதைச் செவிமடுத்துக் கேட்கும் பொது பிரணவப்பொருளாய் “ஓம்“ என்னும் ஒலி கேட்டுக் கொண்டேயிருக்கும். இவ்விநாயகரை ஓங்கார ஒலி விநாயகர் என அழைப்பர்.

**ஆளுமை (ஸ்டைல்) விநாயகர்**

காரைக்குடியை அடுத்துள்ள கிராமத்தில் வீற்றிருந்து கருணாகடாட்சம் பொழியும் கற்பகவிநாயகர், தனது வலது கையில் மோதிரம் அணிந்து இடது கையை இடுப்பில் மிடுக்காக (ஸ்டைலாக) வைத்திருக்கும் கோலத்தினால் ஆளுமை (ஸ்டைல்) விநாயகர் என அழைக்கப்படுகிறார்.

**திருநீலகண்ட விநாயகர்**

சுசீந்திரம் தாணு மாலயன் கோயிலில் எழுந்தருளியுள்ள விநாயகரை மக்கள் திரு நீலகண்ட விநாயகர் எனப்போற்றி வழிபடுவர். தந்தையை இஷ்ட தெய்வமாக வழிபட்டதால் இத்தலத்தில் உள்ள விநாயகருக்கு இந்தப் பெயர் வழங்கலாயிற்று எனக் கோயில் புராணம் கூறும்.

**விகட சக்கர விநாயகர்**
காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தின் வெளிப்பிராகாரத்தில் வீற்றிருக்கும் விநாயகர், வேடிக்கையான உருவ அமைப்புடன் அமைந்துள்ளதால் விகட சக்கர விநாயகர் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றார்.

**காட்சி சொல்லும் விநாயகர்**
ஸ்ரீ சைலம் ஆலயத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் விநாயகரை வழிபடும் மக்கள் "அம்மனுக்குச் சொல்லு சாமிக்குச் சொல்லு சாட்சி சொல்லு விநாயகா என்று மனமுருகி வேண்டுதல் செய்துகொண்டு தங்கள் பெயரையும் கூறி வழிபட்ட பின்னர் மூலமூர்த்தியை வணங்கச் செய்வர்.

**வலதுகாலை ஊன்றிய விநாயகர்**
தென் (மூலை) கடம்பூர் ஆலயத்தில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள விநாயகர் வலது காலை ஊன்றிய கோலத்தில் காட்சி தருகிறார். இதற்கான பல புராணக் கதைகள் உள்ளன.

**நவராத்திரிக் கொலு விநாயகர்**
கும்பகோணம் மகாமகத் திருக்குளத்தின் அருகில் உள்ள மிகப் பழமையான ஜெகந்நாத விநாயகர் ஆலயத்தில் நவராத்திரியின் போது மிகத் தடபுடலாக கொலுவைப்பதுடன் ஒன்பது நாளும் ஒவ்வொரு வகையான அலங்காரங்களுடன் பூஜை வழிபாடுகள் இடம் பெறும்.

**நவக்கிரக விநாயகர்**
ஸ்ரீ பகவத் நவக்கிரகவிநாயகர், சூரியனை நெற்றியிலும், சந்திரனை நாபிக் கமலத்திலும், செவ்வாயை வலது தொடையிலும், புதனை வலது கீழ்க்கையிலும் வியாழனைச் சிரசிலும், வெள்ளியை இடது கீழ்க்கையிலும், சனியை வலது மேல்கையிலும், ராகுவை இடது மேல் கையிலும், கேதுவை இடது தொடையிலும் கொண்டு காட்சி தருகிறார்.

**விதிவிலக்கான சித்தி அரசு விநாயகர்**
குரவப்புலம் கோயிலில் மூலஸ்தான லிங்கவடிவ ஆலயத்துள் அமர்ந்துள்ள சித்தி அரசு விநாயகர் விதிவிலக்கான அமைப்பாகக் கருதப்படுகிறது.

**ஒட்டிய வயிற்றை உடைய விநாயகர்**
பொதுவாக விநாயகர் தொப்பை வயிற்றுடனேயே காட்சிதருவார். திருநாரையூரில் உள்ள பிள்ளையார் ஒட்டிய வயிற்றுடன் காட்சி தரும் கோலம் மிகவும் அபூர்வமானது.

**கை உடைந்த விநாயகர்**
சிதம்பரத்தில் செங்கழுநீர் விநாயகர் சன்னதியில் உள்ள விநாயகர் சிலையின் கை உடைந்த நிலையிலேயே வழிபடப்படுகின்றது. திப்புசுல்தான் காலத்தில் அன்னியர்
படையெடுப்பின் போது இந்தச் சிலையின் கை உடைக்கப்பட்டுவிட்டது. பின்னர் வேறு விநாயகர் சிலையை பிரதிஷ்டை செய்வதற்குப் பலமுறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு முறையும் பக்தர்கள் கனவில் விநாயகர்தோன்றி "கை உடைந்த உங்கள் மகனை விரட்டிவிடுவாயா?" எனக்கேட்டதாக ஐதீகம். எனவே இன்றும் கை உடைந்த நிலையிலேயே விநாயகர் அனுக்கிரகம் செய்கிறார்.

**உலகிலேயே உயரமான விநாயகர்**
கோல்ஹாபூர் (மகாராஷ்டிர மாநிலம்) கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள விநாயகர் சிலை உலகிலேயே மிகவும் உயரமானதென்ற பெருமையைக் கொண்டுள்ளது. இது தரை மட்டத்திலிருந்து 90 அடி உயரமாகவும் 800 மெட்ரிக்டன் நிறை கொண்டதாகவும் அமைந்துள்ளது. இந்த விநாயகர் ஐந்து தலை நாகபாம்பின் குடையின் கீழ் பாம்பணையில் அமர்ந்த கோலத்திலானது. இச்சிலை புராண நூல்களில் கூறப்பட்டுள்ள சிற்பசாத்திரத்துக்கு அமைய நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

**நித்திய கணபதி ஹோமம்**
ஈரோட்டுக்கு அருகே உள்ள கரும்பாறை என்ற தலத்தில் சங்கடணர அவதாரர் கோலத்தில் விநாயகர் சிலை அமைந்துள்ளது. இங்கு தினசரி நித்ய கணபதி ஹோமம், கஜபூஜை, நிர்மானிய பூஜை நடைபெறும்.

**ஏணி ஏறி பூஜை இடம்பெறும் விநாயகர்**
திருவக்கரை ஆலயத்தில் உள்ள விநாயகரின் உருவம் மிகவும் பிரம்மாண்டமானதாக உள்ளதால், பூஜையைக் குருக்கள் ஏணிமீது ஏறி நின்று நடத்துகிறார். இதனால் ஏணி ஏறிப் பூஜையைப் பெறும் விநாயகர் என்ற பெயர் ஏற்பட்டுள்ளது.

**மொட்டை விநாயகர்**
அழகிய பாண்டியபுரம் (திருநெல்வேலி) தலத்தில் உள்ள விநாயகரின் தலை மொட்டையாக உள்ளது. ஆதிகாலத்தில் பிள்ளையாரைப் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்வதற்காக சிதறுகாயாக 1008 தேங்காய்களை உடைத்தனர். கடைசியாக உடைத்த தேங்காய் விநாயகரின் தலையில் பட்டு மொட்டந் தலையாகிவிட்டதாக ஒரு ஐதீகம் நிலவுகிறது.

**நிறம் மாறும் விநாயகர்**

குமரி மாவட்டத்தில் உள்ள தக்கலை மகாதேவர் கோயிலில் உள்ள விநாயகர் திருவுருவச் சிலை ஆவணிமாதத்திலிருந்து தொடர்ச்சியாக ஆறு மாதங்கள்வெள்ளை நிறமாகவும். மாசிமாதத்திலிருந்து தொடர்ச்சியாக ஆறு மாதங்கள் கருமை நிறமாகவும் காட்சி தருகிறார்.

**துண்டிராஜ விநாயகர்**

காசியில் விநாயகருக்கும் தனிக் கோயில் உள்ளது. இவ்விநாயகர் துண்டிராஜ விநாயகர் என அழைக்கப்படுகிறார். இந்த விநாயகரின் அடிப்பீடம் மிகக் குறுகலாகி இடையில் சற்று விரிந்தும் நுனி கூர்மையாகவும் உள்ளது. விநாயகரின் மேல் வலக்கையில் மழுவும், மேல் இடக்கையில் உருத்திராட்சமாலையும், கீழ் வலக்கையில் தந்தமும், கீழ் இடக்கையில் மோதகமும் ஏந்தியுள்ளார்.

**நந்தி முகவிநாயகர்**

பசவனகுடி (பெங்க;ர்) நந்தி ஆலயத்தின் அடிவாரத்தில் உள்ள தொட்ட கணபதி விநாயகரின் முகமும், காதும் நந்தியினுடையது போன்று தோற்றமளிக்கின்றது.

**பஞ்ச கிருத்திய விநாயகர்**

விநாயகரின் எழுத்தாணி ஏந்திய கரம் படைத்தலையும், கொழுக்கட்டை ஏந்திய கரம் காத்தலையும், அங்குசம் ஏந்திய கரம் அழித்தலையும், பாசம் ஏந்திய கரம் மறைத்தலையும், அமுத கலம் ஏந்திய கரம் அருளலையும் குறிக்கும் என்பர்.

**கருங்கல்லில் செதுக்கப்படும் விநாயகர்**

கருவறையில் விநாயகரைக் கருங்கல்லாலேயே செதுக்கி பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்வார்கள். கல்லின் சக்தி மற்ற எல்லா மூலகங்களையும் விடப் பன்மடங்கு கூடியது. எந்தப்பொருளையும் இது தன்னோடு இழுத்துக் கொள்ளும் பண்புடையது. கருங்கல்லில் பஞ்ச பூதங்களின் தன்மையும் அடங்கியுள்ளது. ஆகாயத்தைப்போல வெளிச்சத்தங்களை உள்ளிளுத்து ஒடுக்கி பின்னர் வெளியிடும் சக்தி உண்டு. கல்லினுள்ளே வளி உண்டு.

நெருப்புத்தன்மை (சிக்கிமுக்கிக்கல்லை உராஞ்சுவதன் மூலம் நெருப்பைப் பெறலாம்) உண்டு. கல்லில் நீரும் உள்ளது. கல் மண்ணின் தன்மையால் ஆக்கப்பட்டது. எனவே ஐம்பூத வடிவான கருங்கல்லில் ஐம்பூத ரீதியிலான ஆண்டவை பிரதிஷ்டை செய்கிறோம்.

**சிங்க வாகன விநாயகர்**

நாகை நீலயதாட்சி அம்மன் ஆலயத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஹேரம்ப விநாயகர் சிங்கத்தின் மீது அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார். இவ்வாறு சென்னை அகத்தியர் கோயிலிலும் தூண் ஒன்றில் விநாயகர் சிங்கவாகனத்தில் காட்சி தருகிறார்.

**மயில்வாகன விநாயகர்**

பாண்டிச்சேரி மணக்குள விநாயகர் ஆலய சுதைச்சிற்பத்திலும், திருவானைக்கா அகிலாண்டேசுவரி ஆலய சித்திரத்திலும், அருப்புக்கோட்டை தாதன்குனவிநாயகர் கோயிலிலும் விநாயகர் மயில்வாகனத்தில் அமர்ந்த கோலத்தில் அருள்புரிகிறார். இவ்வாறே தியாகராஜ நகரின் அகத்தியர் கோயிலின் மயில்வாகன விநாயகர் அமைகிறார்.

**குதிரை வாகன விநாயகர்**

சென்னப்ப நாயக்க பாளையத்தில் உள்ள மலையாண்டவர் விநாயகர் கோயிலிலும், கோவையில் உள்ள குருபதேசி கவுண்டர் விநாயகர் ஆலயத்திலும் விநாயகர் குதிரை வாகனத்தில் ஆரோஹனிந்து அருளாசி புரிகிறார். சென்னை அகத்தியர் கோயிலில் உள்ள தூணில் குதிரை வாகனத்தில் விநாயகர் காட்சித்தருகிறார்.

**நந்தி விநாயகர்**

நெல்லை காந்தியம்மன் ஆலயத்தில் உள்ள விநாயகரும், சுசீந்திரம் தாணுமாலயன் ஆலயத்தில் உள்ள விநாயக சிற்பங்கள் முன்பாக நந்தி (காளை) காணப்படுகின்றது.

**யானை வாகன விநாயகர்**

திருச்செந்தூர் ஆவுடையார் குளக்கரை, அரசாள்வார் விநாயகரும், ஸ்ரீ வில்லிபுத்தூர் மடவார் வளாக வைத்திய நாத சுவாமி ஆலயத்தில் வீற்றிருக்கும் கல்யாண விநாயகரும், புதுக்கோட்டையிலுள்ள நூதன விநாயகர் ஆலயத்தில் உள்ள விநாயகரும் யானை வாகனத்தில் ஏறி கருணை புரியும் கோலத்தில் இருப்பதைக் காணலாம்.

**பூத கண வாகன விநாயகர்**

திருப்பரங்குன்றம் பழைய சொக்கநாதர் ஆலயமுன் மண்ப வலப்புறத் தூணில் விநாயகர் பூதக்கணத்தின் மீது போர்கோலத்தில் காட்சி தருகிறார்.

**வழமையாக அபிஷேகம் பெறாத விநாயகர்**

திருப்புறம்பயத்தில் உள்ள பிரளயம் காத்த விநாயகர் சிலைக்கு விநாயக சதுர்த்தியன்று ஒரு குடம் தேன் அபிஷேகம் செய்யப்படும். அவ்வளவுதான். மற்றைய நாட்களில் எந்தவிதமான அபிஷேகங்களும் நடைபெறாமல் பூஜை புனஸ்காரங்கள் இடம்பெறும்.

**பிரம்ம புராணம் கூறும் விநாயகர் வரலாறு**

விநாயகருக்குப் பானை போன்ற வயிறு தோன்றிய வரலாற்றுச் சம்பவங்களை பிரம்ம புராணம் மிக விரிவாக எடுத்து இயம்புகிறது.

**விநாயகரின் பல்வேறு ரூபங்கள்**

ஸ்ரீ தத்துவ நிதி, மந்திர மஹோத்தி, மந்திர ரத்நாகரம், சில்பரத்னம், அம்சுமத் போதகம், சுப்ரபோதா-கம்ஆகிய நூல்கள் விநாயகரின் பல்வேறு ரூபங்களை வர்ணிக்கின்றன.

**பௌத்த மதம் கூறும் விநாயகர்**

கௌதம புத்தர் திருமாலின் அவதாரம் எனவும், அந்தப் புத்தரே ராஜகிருஹத்தில் தங்கியிருந்த வேளை, தமது அந்திமக்காலத்தில், சீடரான ஆனந்தருக்கு கணபதி ஹிருதயம் என்ற மந்திரத்தை உபதேசித்தார் எனவும் மஹாயான பௌத்த நூல் கூறுகிறது.

**விநாயக தந்த விளக்கம்**

விநாயகரின் உடைந்த தந்தம் பாசஞானம், உடையாமல் உள்ள தந்தம் இறைவனை உணர்த்தும் பரம ஞானம் எனவும் குறிப்பிடப்படும்.

**ஔவையார் எழுதிய “வேழமுகம்”11**

ஔவையார் ”விநாயகர் அகவல்” என்ற நூலையும் ”வேழமுகம்” என்ற நூலையும் யாத்துள்ளார். ஏட்டுச்சுவடியில் இருந்த ”வேழமுகம்” நூல் 1903 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது. விநாயகர் அகவல் என்ற நூலும், வேழமுகம் என்ற நூலும் விநாயகர் பெருமையை எடுத்துக்கூறுகின்றன.

**விநாயகர் தீர்த்தங்கள்**

சில தீர்த்தங்களின் பெயரால் பிரபலமாகியுள்ள விநாயகர்:

1. மணக்குள விநாயகர் - பாண்டிச்சேரி
2. கங்கை கணபதி - குடந்தை கீழ்க்கோட்டம்
3. காவிரி கண்ட விநாயகர் - பாண்டிக் கொடுமுடி
4. கங்கை விநாயகர் - ராஜேஸ்வரம்
5. படித்துறை விநாயகர் - திருவிடை மருதூர்
6. குளம் வெட்டிய கணபதி - திருப்பன் கூர்
7. வள்ளக்குளப் பிள்ளையார் - மறவன்புலவு (கேரளா)

**பிள்ளையார் சுழி**

பிள்ளையார் சுழி என்பது அகரம், உகரம், மகரம் (அ,உ,ம) ஆகிய மூன்று எழுத்துக்களையும் உள்ளடக்கிய நாதப்பிரம்மமாகிய ”ஓம்” என்ற ஓங்காரப் பிரணவத்தின் தொடக்க நிலையாகும் இதில் வட்டம் சிவசக்தி பீடமாகவும், கோடு லிங்க வடிவமாகவும் உள்ளது. எதையும் எழுதத்தொடங்குமுன் பிள்ளையார் சுழியை எழுதுவது பண்டைய மரபு.

**விநாயகருக்கான 21 நிவேதனங்கள்**

விநாயகருக்கு பின்வரும் 21 நிவேதனப் பொருட்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை கரும்பு, பழங்கள், சர்க்கரை, பருப்புவகை, நெல், எள், பொரி, அவல், துவரை, இளநீர், தேன், பயறு, அப்பம், பச்சரிசி, புட்டு, வெள்ளரிப்பழம், மோதகம், கொழுக்கட்டை. கிழங்கு வகை, சித்திரான்னம், கடலை வகை என்பவையே.

**விநாயகருக்கு நிவேதனமான சித்திரான்னங்கள்**

பருப்புப் பொங்கல், சர்க்கரைப் பொங்கல், புளியஞ்சாதம், மிளகுச் சோறு, தயிர்ச்சாதம், எள் அன்னம், கடுகுச் சோறு, உளுந்துச்சோறு, பாயாச வகைகள். ஆகியவை சித்திரான்னங்களாம்.

**விநாயகருக்கு பஞ்சாமிருத அபிஷேகம்**

விநாயகருக்கு அபிஷேகம் செய்யப்படும் பஞ்சாமிருதத்தில் இருவகை உண்டு. ரச பஞ்சாமிருதம் என்பது பால், தயிர், நெய், தேன், சர்க்கரை, இளநீர் போன்றவை கலந்ததாகும். இவற்றுடன் வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் ஆகிய முக்கனிகளையும் சேர்ப்பது பழ பஞ்சாமிருதம் ஆகும்.

**விநாயகரின் திருமஞ்சன முழுக்கு**

திருமெய் அஞ்சனம் என்பதே மருவி. காலப்போக்கில் திருமஞ்சனம் என்றாகிவிட்டது. அஞ்சனம் என்பது எண்ணெய் தடவுதல் என்று பொருள்படும். மெய் என்பது உடல், எனவே மெய் அஞ்சனம் எனப்படுவது உடலுக்கு எண்ணெய் பூசுவது. ஆக, திருமெய் அஞ்சனம் என்று கூறுவது இறைவன் திருமேனிக்கு எண்ணெய் தடவுதல் (காப்பிடுதல்) என்பதே.

**விநாயகருக்கான அறுவகை உபசாரங்கள்**

1. அபிஷேகம் - நீர், பால், தயிர், பழரசங்கள், இளநீர், தேன், பன்னீர் போன்றவற்றால் நீராட்டுவது
2. அலங்காரம்- குறிப்பாக மஞ்சள், சிவப்பு வெள்ளைநிற வஸ்திரங்களாலும், அறுகம்புல், மலர்மாலைகளால் அழகுபடுத்துவதாகும்.
3. அர்ச்சனை- துதிப்பாடல்களாலும் அறுகம்புல், மலர்கள் போன்றவற்றாலும் பூஜிப்பதாகும்.
4. நைவேத்தியம் - கடலை, அவல், மோதகம், லட்டு போன்ற உணவு வகைகளையும், பால், பழம் போன்றவைகளையும் படைப்பது.
5. ஆராதனை- தூபம், தீபங்களால் ஆராத்தி செய்வது
6. உற்சவம் - பக்தர்கள் ஒன்று சேர்ந்து வழிபாடு, பஜனை முதலியவற்றை நடத்தியபின் மூர்த்தியை வீதிவலமாக எடுத்துச் செல்வது.

**விநாயக வழிபாட்டில் மணி ஓசை**

விநாயகர் வழிபாட்டின் போது இசைக்கப்படும் மணி ஓசையை ஏற்படுத்தும் வகையில் அடிக்கப்படும் கைமணியை இடுப்புக்கு மேலாகவே பிடித்துக் கொண்டு மணியோசையை ஒலிக்கப்பண்ண வேண்டும் எனக் கிரியா விளக்க நூல்கள் கூறுகின்றன.

**கணேச உத்தர தாயினி உபநிடத - விநாயக ஹோமம்**

வெள்ளிக்கிழமையன்று பிரம்ம முகூர்த்த (அதிகாலை) வேளையில் ஸ்ரீ விநாயக ஹோமத்தை விநாயக மந்திர உச்சாடனம் செய்வதே மிகவும் சிறந்தது என்பதை கணேச உத்தர தாயினி உபநிடதம் கூறுகிறது.

**விநாயக அபிஷேக திரவிய ஒழுங்குமுறை**

விநாயகர் சிலைக்கு முறைப்படி அபிஷேகம் செய்வதற்குப் பின்வரும் திரவியங்களை அவ்வவ் வொழுங்கில் செய்தல் வேண்டும் எனச் சகலாகம சங்கிரஹம் என்ற கிரியா விளக்க நூல்கள் கூறுகின்றன.

நல்லெண்ணெய், அரிசிமா, நெல்லிமுள்ளிமா, மஞ்சள் மா, பஞ்ச கவ்வியம், ரசபஞ்சாமிருதம் பழபஞ்சா-மிருதம், பால், தயிர், நெய், தேன், சர்க்கரை, கரும்புச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, நாரத்தம்பழச்சாறு, தாமரத்தம் பழச்சாறு, குளஞ்சிப்பழச்சாறு, மாதுளம் பழச்சாறு, விளாம்பழச்சாறு, இளநீர், சந்தனக் கலவை, கும்பநீர், பன்னீர், புனித கங்கை நீர், அந்தக்கோயிலின் தீர்த்த நீர்.

**பஞ்சமுக விநாயகத்தோற்றம்**

மகா கணபதி, சித்த கணபதி, வித்யா கணபதி, சக்தி கணபதி, மோட்ச கணபதி என்ற ஐந்து கணபதி மூர்த்தங்களும் ஒன்று சேர்ந்ததே பஞ்சமுக விநாயகத் தோற்றமாகும்.

**விநாயகரின் விசேடப் பெயர்கள்**

| | | |
|---|---|---|
| அகத்திய விநாயகர் | - | மயிலாடு துறை |
| ஆலால சுந்தர விநாயகர் | - | மதுரை |
| இந்திர விநாயகர் | - | சென்னி மலை |
| கருக்காத விநாயகர் | - | திருக்கச்சூர் |
| தூண்டில் விநாயகர் | - | ஸ்ரீ வைகுண்டம் |
| வெள்ளொருக்கு விநாயகர் | - | ஓரகடம் |
| பைரவி விநாயகர் | - | புதுக்கோட்டை |
| வயிறு வெடித்த விநாயகர் | - | காக்கைய நல்லூர் |
| கைகாட்டி விநாயகர் | - | திருநாட்டியத்தான்குடி |
| சர்க்கரை விநாயகர் | - | திருநெல்வேலி |
| கடுக்காய் விநாயகர் | - | திருக்காறாயில் |
| வெயிலுக்கு கந்த விநாயகர் | - | உப்பூர் |
| பாஸ்கர விநாயகர் | - | திருப்புவனம் |
| பாதரி விநாயகர் | - | பழனி |
| பிரளயம் காந்த விநாயகர் | - | திருப்புறம்பியம் |
| களவாணி விநாயகர் | - | சங்கரன் கோயில் |
| ஆடுவடு விநாயகர் | - | கோயமுத்தூர் நாலாயிரத்தொரு |
| விநாயகர் | - | திருமணிக்கூடல் |
| சுகம்தரும் விநாயகர் | - | தூத்துக்குடி |
| தோகையடி விநாயகர் | - | குன்றக்குடி |
| கூப்பிடு விநாயகர் | - | திருமுருகன் பூண்டி |
| கோடி விநாயகர் | - | கொட்டையூர் |
| துணையிருந்தவிநாயகர் | - | திருப்பனையூர் |

| | | |
|---|---|---|
| படிக்காசு விநாயகர் | - | திருவீழிமலை |
| மாவடி விநாயகர் | - | நாகபட்டினம் |
| சந்திவிநாயகர் | - | திருநெல்வேலி |
| வழித்துணை விநாயகர் | - | ஸ்ரீ பெரும்புத்தூர் |
| கோசல விநாயகர் | - | பழனி |
| அகத்திய விநாயகர் | - | மயிலாடுதுறை |
| அனுக்கை விநாயகர் | - | தென்காசி |
| ஆத்திசூர விநாயகர் | - | செங்கோட்டை |
| உமைஅர்த்தபாகவிநாயகர் | - | திருவிதாங்கோடு |
| கபில விநாயகர் | - | திருவாதவூர் |
| கீழை விநாயகர் | - | வயலூர் |
| உதயபார்த்தாண்ட விநாயகர் | - | சுசீந்தரம் |
| ஆகசாலை விநாயகர் | - | வடசேரி |

## பஞ்ச கவ்யம்

பஞ்ச கவ்யம் தயாரிக்கும் முறை பற்றி "தர்மசாஸ்திரம்" என்ற நூலில் "பலம்" என்ற நிறை அலகில் கூறப்பட்டுள்ளது. ஒரு பலம் என்பது மூன்று இந்திய வெள்ளிரூபா நாணயத்தின் நிறைக்குச் சமனாகும். பஞ்சகவ்யம் தயாரிக்கும் போது கோசலம் ஒருபலம், கோமயம் கைக்கட்டைவிரல்தடிப்பத்தின் பாதிஅளவு, பால் ஏழு பலம், தயிர் மூன்று பலம், பசுநெய், ஒருபலம்,தர்ப்பைச் சாறு ஒரு பலம் என்ற விகிதாசரம்தில் அமைய வேண்டும் எனக் கூறப்படுகிறது. பஞ்சகவ்வியம்தயாரிக்கும் போது உரிய மந்திர உச்சாடனம் செய்யவேண்டும். என விதிக்கப்பட்டுள்ளது.

